# பட்டினத்தார் ஞானம்

Pattinathar Gnanam

நேரிசை வெண்பா

நண்பான நெஞ்சுக்கே ஞானத்தால் நல்ல புத்தி
வெண்பாவாய் நூறும் விளம்புவே –பண்பாக்
ககனப் பதமுறவக் கன்ம மருகக்
ககனகதிர் வேல் முருகன் காப்பு.

நெஞ்சுடனே தாம்புலம்பி நீலநிறத் தாளின்ற
குஞ்சரத்தை யாதரித்துக் கும்பிட்டால் –கஞ்சமுடன்
காமமுதல்: மும்மலத்தின் கட்டறுத்து ஞானமுடன்
பூமிதனில் வாழ்வரெப்போ தும்.

எப்போ திறைவன் எழுத்தை விட்டுத் தப்புவோம்?
எப்போ தெழுத்திரண்டை ஏத்துவோம்? –எப்போது
காமன் வலையறுப்போம்? காரொளியைக் கண்டு நெஞ்சே!
ஏமன் வலையறுப்ப தென்று?

என்றும் பயமறவே ஈரெழுத்தும் ஓரெழுத்தாய்
நின்ற சிவ லிங்கத்தை, நெஞ்சே! கேள்: –உண்டுறங்கித்
தேசமெல்லாம் நின்றசைந்த தீயெழுத்தே லிங்கங்காண்
ஆசைவிந்தே ஆவுடையாள்.

ஆவுடையா ளோடிருந்தேன் அருளானந் தம்பெறவே
கோவுடையாள் நின்றதினங் கூடியே –பூவுடையாள்
கட்டழகி யைத்தான் கடந்து பெருவெளியில்
இட்டமுடன் நெஞ்சே! இரு.

இருவினைக்கு ளாகாதே என்னுடைமை எண்ணாதே
பெருகுசினங் கொண்டு பினற் றாதே –மருவுமலக்
கள்ளமெல்லாம் விட்டுங் கரைந்து கரைந்துருகி
உள்ளுணர்ந்து நெஞ்சேபார் ஒன்று.

ஒன்றும் அறியாதே ஓடி அலையாதே
சென்று மயங்கித் திரியாதே –நின்ற
நிலைபிரியா தேநெடிய நெஞ்சே! கொடிய
புலைவினையு மாற்றும் பொருள்.

பொருளுடைமை நம்பாதே பொய்வாழ்வை நத்தி
இருளுறவை நம்பி இராதே –பொருளுறவு
கொண்டறிவினாலே குறித்து வெளியதனைக்
கண்டுபிடித் தேறுநெஞ்சே! காற்று.

காற்றுடனே சேர்ந்து கனலுருவைக் கண்டவழி
மாற்றி யினிப்பிறக்க வாராதே –ஏற்றபடி
ஓடி அலையாதே ஓங்காரத் துள்ளொளியை
நாடியிருப் போம் மனமே! நாம்.

நானென தென்றுவினை நாடி அலையாதே
தானவனே யென்று தரியாய் நீ: –ஏன் மனமே!
வீணாவல் கொள்ளாதே மேலாம் பழம்பொருளைக்
காணாவல் கொள்ளாய் கருத்து.

கருத்துவே றாகாதே கண்டிடத்தோ டாதே
விரித்துப் பலவேடம் மேவாப் –பெருத்ததொரு
சஞ்சலத்தை விட்டுச் சலமறிந்து காண் மனமே!
அஞ்செழுத் தாலொன்பது.

ஒன்பதுவாய்க் கூட்டை யுறுதியென்று நம்பாதே
ஐம்புல னேயென்றணுகாதே –இன்பமுடன்
சிற்பரத்தி னுள்ளே தெளிந்தபர மானந்தத்
துட்பொருளே மெய்யென் றுணர்.

மெய்யுணர்ந்து பாரா விரிந்தகன்று போகாதே
அய்யன் திருவிளைபாட்டா நெஞ்சே! –செய்யதோர்
ஆணெழுத்தும் பெண்ணெழுத்து மாகி நடுநின்ற
காணும் பொருளுரைக்குங் கல்.

கல்லான நெஞ்சே! கவலைக் கருத்தாகிப்
பொல்லாப் பவக்கடலில் போகாதே –எல்லாம்
செலக்குமிழி யென்று நினை: செம்பொனம்ப லத்தைக்
கலக்கமறப் பார்த்தே கரை.

கரைதெரியா இன்பக் கடலில் மூழ்காதே
வரைகடந்த வாழ்வை நத்தாதே –உரையிறந்த
ஓசைவிந்து வேமனமே! உற்றசபையாலறிந்து
நேசமுள்ள பாக்கியத்தி னில்.

பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தால் சலியாதே –நோக்குமே
ஒருத்தன் றிருவிளைட்டென்றுணரு நெஞ்சே!
கருத்தாலே நின்று கருது.

கருதாதே மங்கையர்கள் காமவலைக் கேங்கி
உருகாதே நெஞ்சே ஒருவன் –இருகாலைக்
காத்தயர்ந்து சேர்த்துக் கனலைக்கண் காட்டினகண்
போற்றிப்பார் ஒத்தநல்ல பொன்.

பொன்னாசை மண்ணாசை பூங்குழலா ராசையெனச்
சொன்னாசை யென்றறிந்து சோராதே –எந்நாளும்
ஈசன் அமைத்தாங் கிருக்குங்கா ணிம்மூன்றும்
பாசமது நெஞ்சே பரிந்து.

பரிந்து திரியாதே பார்வினைக்கஞ் சாதே
அறிந்துருகிச் சிந்தித் தலையேல் –வருந்தி
நடந்துசித்ர நாடியிலே நாதமறி நெஞ்சே!
உடைந்திடு முன்னை உடம்பு.

உடம்பழிந்த பின்மனமே: ஒன்றுங் கிடையா
துடம்பழியு முன்கண் டுணரா –துடம்பிற்
கருநிறத்தைச் சேர்ந்து கருமலைச்சிற் றற்றுப்
பருகு கலைமதியப் பால்.

பாலிருக்கும் தோல் தநத்தைப் பாராதே மங்கையர்கள்
காலிடுக்கை நத்திக் கரையாதே –கோலெடுத்து
விர மறலி வருமுன் வினையறுக்கும்
பாரவழி யின்னருளைப் பார்.

பார்த்தவிடமெல்லாம் பரமென் றிருமனமே
காற்றனல் மண் நீர்வெளியாம் கண்டவெல்லாம் –மாத்திரண்ட
ஐம்புலனு நில்லா ஆசைகளும் நில்லாவே
என்புடலும் நில்லா தினி.

இனியசுகம் ஐம்புலனென் றெண்ணுதே நெஞ்சே
இனிய சுகமற வாதே –இனியசுகம்
கண்டதெல்லா மெவ்வுலகு காணாத இவ்வுலகில்
நின்றதோ நில்லாத தோ?

நில்லாமல் ஓடுகின்ற நெஞ்சே! நிலையில்லா
எல்லாம் பகையா யிருக்குங்காண் –பொல்லாக்
கருக்குழியி லேபிறந்த கன்ம வினை யானால்
திருக்கறுக்க வேண்டுந் தினம்.

தினந்தினைப்போ தாகிலுந்தான் தீதறநில் லாமல்
இனம் பிரிந்த மான்போல் இருந்தாய் –தினந்தினமும்
ஓங்காரத் துள்ளொளியை யுற்றுணர்ந்து நீ மனமே!
ஆங்கார அச்சம் அறு.

அச்சத்தால் ஐம்புலனாம் ஆங்காரத் தால்மேய்ந்த
கச்சத்தா னிச்சயமாய்க் கள்ளதோ –மெச்சத்தான்
அண்டமெல்லாம் ஊடுருவ ஆகாச முங்கடந்து
நின்ற நிலைதான் நிலை.

நிலையறிந்து நில்லாமல் நீபாவி நெஞ்சே
அலைமதிபோ லேதினமு மானாய்: –கலையறிந்து
மாரனையுங் கூற் றினையும்மா புரத்தை யும்புகைத்த
வீரனைத் தேட விரும்பு.

விரும்பித் தனித்தனியே மெய்யுணரா தேமாய்
இரும்புண்ட நீர்போல ஏகும் –கரும்பனைத்
தின்றாலல்லோ தெரியும் நெஞ்சே! தின் ஐம்புலனை
வென்றாலல்லோ வெளிச்ச மாம்?

வெளிச்சமில்லா வீடே விளக்கேற்றின தாக்
களிசிறந்து நின்றதைக்கா நெஞ்சே!–வெளிச்சமற,
தொண்ணூற் றறுதத் துவமொன்றாய்த் தோன்றுங்காண்
எண்ணிலிவை காணா திருட்டு.

இருட்டனைய மாய்கையா லெவ்வுலகுந் தாய
பொட்டனையே மூடைம் புலனால்–திருட்டுமன
வண்டருடன் கூடாதே வாழ்மனமே! நாமிருவேம்
கண்டுகொள்வோம் காணாதது.

காணாத தைக் கண்டால் கண்ட தெல்லாங் காணாது
வீணாவல் கொண்டுள் மெலியாதே–நாணாதே
இந்திரியத் தோடு மிணங்காதே பாவிநெஞ்சே!
செஞ்சொல்மறை அக்கரத்தைத் தேடு.

தேடினா லைந்துதிரு வக்கரத்தைச் சென்று வெளி
நாடினால் நெஞ்சே! நலம் பெறலாம்:––வாடியே
பொல்லாப் புவிகாணப் போகமதை நம்பாதே!
எல்லாம் வெயில் மஞ்சளே.

மஞ்சனைய கூந்தல் மடவாரைக் கண்டுருகும்
பஞ்சமல நெஞ்சே! பகரக்கேள்:––மஞ்சள்
மயங்காணும் இந்தவுடல் மாயவாழ் வெல்லாம்
அயன் காணழி சூத்திரம்.

சூத்திரத்தாலாடும் சுழுமுனையைத் தான்திறந்து
பார்த்திருந்தால் வாராது பாவமெல்லாம்:––சூத்திரத்தைப்
பாராம லேயிருந்து பாவிமன மேபிறக்க
வாராம லேயிருக்க வா:

வாசி தனைப்பிடித்து வன்கனலோ டேசேர்த்துச்
சீசி யெனவே திரியாமல்––மாசி
இருளானதைச் சேர்ந் திருந்தாயே நெஞ்சே!
பொருளா னதைமறந்து போட்டு!

போட்டுவிக்கும் பொல்லாப் புழுச் சொரியும் நாய்விடக்கே
கூட்டங் குலைந்து குலைந்திடுமுன்––காட்டிடிற்
தாழ்வுறாய் நெஞ்சே! தராதர மாயெங்கும்
மூழ்வா னதையுயிர் பொம் முன்.

முன்னே யயனெழுதும் முன்றுவினை கண்டுழன்று
பின்னுங் தெரியலையே பேய் மனமே!–தன்னை
அறியாதிருந்தால் அவனறி வானோ!
குறியான புத்தியென்றே கொள்.

கொள்ளைக்குட் பட்டுக் குடிகேட ரோடிருந்து
கள்ளக் கருத்தால் கருதாதே––மெள்ள
ஆய்ந்தாய்ந்து பார்த்துநீ ஆறாறுக்கப்பாலே
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

தெளிந்தநீர் பட்டமுதம் சேர்தால் தெளியா
தெளிந்தநீர் காட்டா தவைபோல்--தெளிந்தால்
சகலபொருள் தோற்றும் தாழ்வுறா தொன்றும்
பகலிரவில் லாத பதி.

பதிபசுபா சங்களையும் பற்றியுருவப்
பதிதனிலே தங்கிப் பலரும்--சுதிபெறவே
வீணாமோ நெஞ்சேகேள் வேதாந்தத் துட்பொருளைக்
காணாம லாமோ கணக்கு?

கணக்கறியா மாயக் கருவிகாணா திப்
பிணக்கறியா மற்பேதை நெஞ்சே!--இணக்கம்
அறிந்திணங்க வேண்டும் அருள் வெளியினுள்ளே
செறிந்தவிந்து நாதத்தைச் சேர்.

சேராதே மாய்கைதனை சேர்ந்து கருக்குழியைப்
பாராதே நெஞ்சே! பகையாதே--சீரான
சித்திரத்தைப் பார்த்துத் தினமனமே சித்திரத்தில்
உத்திரத்தைக் கொள்ளா யுகந்து.

உகந்தது நெஞ்சமே! ஓரெழுத்தினாலே
அகந்தனையே சுத்தி பண்ணி யாய்ந்து--முகந்து
குடியாம லாமோ? குலவுமல மான
மிடியா னதுதீர வேண்டு.

வேண்டுந் திரவியமும் மேலுயர்ந்து பள்ளியெல்லாம்
ஆண்ட திரைநாடு மம்பலமும்--மாண்டுபெரும்
காடுயர்ந்தாரே மனமே! மண்டாயோ மாயனயன்
தேடறிய ஈசன் செயல்.

செயபாகா நெஞ்சே! திருட்டுமலக் கோட்டைப்
பயமறவே வெட்டிப் பரப்பி--நயமான
வாசியினால் சுட்டு பதிமயங்கக் கண்டிருப்போம்
பேசிய நாம் பேசாம லே.

பேசாத ஞானப் பெருமைக் கிடப்பதுதான்
ஆசாபா சங்களில்லா தார்க்கல்லோ?--கூசாமல்
தேசமெல்லாம் ஓடித் திரிகின்றா யேமனமே
ஆசாபா சங்களும் நீ யாய்.

பாசங்களைந்து பதியி லிருந்துகொண்டு
பேசரிய காலைப் பிடித்திருக்க--நேசமுடன்
நாமிருவ ருங்கூடி நாதாந்த ஞானத்தைத்
தாமொருவ னாயிருக்கத் தங்கு.

தங்கு நெடுவளையில் சாலங் களுங்கடந்து
எங்கு நான் றானாயிருக்காமல்--மங்கு
கருவானாய் நெஞ்சே! கரிக்கால தூதன்
வருவானே யென்ன வகை?

என்னவகை செய்தோம் எம தூதன் வந்தக்கால்
பின்னையென ஓட்டானே பேய் நெஞ்சே!--சொன்ன
படியேகேள் தூதன் பரிந்துவரு முன்னே
அடிதேடிக் கொண்டே அமர்.

அமரும் மனம்புத்தி யாங்கார மேசித்
தமரும் பொழுதுவே றானோர்--அமரும்
கோவென் றுரைத்த நமன் கொண்டுபோம் போதறிவு
வாவென்றால் நெஞ்சேவா ராது.

வாராது நெஞ்சே! மயக்கம் வருமுன்னே
வேரானதைப் பிடித்து மேலேறிப்--பாராமல்
பொய்யிலே நில்லதே புத்திகெடா தேயிருந்தால்
மெய்யிலே நின்றறிவோம் மெய்.

மெய்யாறு வீடுகளாய் மேலாம் படைவீடாய்
ஐயாறு மாறும் அறுபதாய்--மெய்யாகக்
கண்டதெல்லாம் நான்காண்: காணாத தைத்தேடிக்
கண்டுருகி நெஞ்சே கனி.

கனியருந்த மாட்டாமல் காயருந்து கின்றாய்
கனிருசி போலாகுமோ காய்தான்?--இனியதுகேள்
நானும் நீயுங்கனிகாண்: நடுவிருந் தேருசிகாஓ்:
தேனும்பா லும்போல் சிவன்.

சிவதலங்க ளைத்தேடிச் சீயெழுத்த றுத்துச்
சிவதலய் களைத்தேடிச் சேரா--தவதவங்கள்
பண்ணாதே நெஞ்சே கேள்: பாரவினை வந்தக்கால்
எண்ணாதே அஞ்சியேங்காதே.

ஏங்காதே நெஞ்சே! கேள்: எவ்வினைகள் வந்தாலும்
ஏங்காதே சற்றும் இளைக்காதே:--தாங்காமல்
கொண்டவனும் செத்தவனும் கூட்டத்தா னும்வந்தான்
அன்று குறித் துண்மையி தென் றெண்.

என்ன ரியநெஞ்சே! இனியநற் பாலதனை
அன்னந்தன் னீர் நீக்கியேயருந்து--தன்மை போல்
துன்பங் களைந்து தூயவெளி யூடுருவாய்
இன்பங் களைச்சேர்ந் திரு.

சேர்ந்திருவோ ரும்பாலும் தேனும்போ லேகலந்து
வார்ந்ததிலே யுள்ளுரிசி வாங்காமல்--போங்காலம்
வைத்தமறக் காலன் வருவானே வந்தக்கால்
ஏய்த்திடுவா நெஞ்சே! எவன்?

எவனிருந்து நெஞ்சே! எதிர்ப்பாரு முண்டோ
கவனமற நின்று கருதின்--புவனமெல்லாம்
வித்துயிரெல் லாங்கழண்டு விண்ணுடைந்த தேமனமே!
மற்றுடலை யுண்கிறதே மண்.

மண்ணெழுந்தும் நீரெழுந்தும் வாய்வெழுந்துந் தீயெழுந்தும்
விண்ணெழுந்துங் கூடியொரு வீடாகி –நண்ணரிய
மாயமெல்லா முண்டாக்கி வைத்தான்காண் நெஞ்சே! இக்
காயமெல்லாம் நானாக் கரு.

கருவழிந்தால் வித்தையில்லாக் காரணம்போல் நெஞ்சே!
கருவழிந்தெல் லாம்கண்ட தெல்லாம் –கருதித்
திரியாதே! நெஞ்சே: சிவன் செயலே யல்லால்
மரியாரில் லாதக்கால் வந்து.

வந்ததுவும் நாதாந்த வாசனைக் கண் டேவணங்கித்
தந்திரமாய்சி சென்று தரியாமல் –அந்தரத்தில்
விட்டபட்டம் போலலைந்து வெவ் வினையி னால்மனமே!
தட்டுதகட்டுப் போகாதே தான்.

தானந் தவமுயற்சி தாளாண்மை யோடு நெஞ்சே!
வானம் பிளந்து வழிகூடின் –நானுமதில்
நீயு மொருநிழலில் நின்றங் கிளைப்பாறித்
தோயுமதி தானே தொடங்கு!

தொடங்கு வினையறுத்துச் சுற்றமெலா நீத்தே
அடங்கு மிடத்திலடங் காமல் –கிடந்து
பருந்தெடுத்த குஞ்சாய்ப் பதைத்தாய் மனமே!
அருஞ்சரத் தம்மதனடி.

மதனசரத் தால்மனமே! வையம் மயங்கி
விதனத் துறல்லால்வே றில்லை –மதனாலே
தத்துச் சுகத்தைநத்தித் தானலைய வேண்டாகாண்
மெத்த சுகத்தை வெறுத்து.

வெறுத்துவெருக் கொண்டதுபோ ல்வீணிலே நெஞ்சே!
பொறுத்த மயக்கிற்போ காதே –குறித்தெடுத்துத்
தேடியே வாசிதனைச் சேர்ந்து கலந்த பொருள்
கூடினா லாமே குணம்.

குணங்கள் பலவிதமாய்க் கொள்ளாதே நெஞ்சே!
வணங்குங் குணமாக வந்து –வணங்கியே
மண்டலதமலாங் கடந்து மாவிட்டை நீதிறந்து
மண்டெடுத்துக் கொள்வாய் கனம்.

கன தனத்து மாதர் கழிகாதல் கொண்டே
வினையார் நகைக் குருக வேண்டா –தினமனமே
சோதித்தானல்லால் சுபகாரிய மாகப்
போதித்தால் கொள்விலையோ புத்தி?

புத்தி தரும் வித்தைதரும் பொல்லாப்பில் லாமல் நெஞ்சே!
சித்தி முத்தி பேரின்பம் சேர்ந்திடலாம் –நித்தநித்தம்
தானந்த மானதொரு சற்குருவோ டேபழகி
ஆனந்த முண்டிருந்தக் கால்.

காலவழிச் சென்று கருப்பைக் குழிக்குக்கீழ்
முலமற்ற நல்வழியே முழ்கின்ற –மாலை
இருட்டறுத்துப் போடாமல் என்பாவி நெஞ்சே!
திருட்டுவித்தை செய்கிறாய் சென்று.

சென்று சிவனடியில் சேர்ந்த பெரும்பாம்பு
ஒன்று மிகவாசியைத்தான் ஓட்டாமல்– –நன்றாய்
நிலையாக நில்லா தலைவாய் மனமே!
அலைவாயி னில்துரும்ப தாய்.

தாய்தந்தை பெண்டுபிள்ளை தானென் றிரங்கி நித்தம்
காய்பறிக்கிறாயே கனியிருக்க!– –தாய்தந்தை
எத்தனைபேர் பெற்றாரோ என் மனமே! நாமுந்தான்
எத்தனை பேரைப் பெற்றோம் இங்கு?

இங்குமங்கு மாய்மனமே! ஈடழிய வேண்டாகாண்:
அங்கம் பொருளா அறிந்து கொண்– –டெங்கெங்கும்:
நாமே சிவமாக நாடினால் ஞானமொழி
தாமே அருளைத் தரும்.

அருளில்லாதார்க்கும் அருளறிவங் காமோ?
அருளறிவு தானே ஆனந்தம்?– –அருளறிவு
தேடுவதுங் கூடுவதும் சிந்தையானந்தமுடன்
நாடுவதுந் தானறிவி னால்.

நாடிலெழுத் தாறும் நடுவெழுத் தீரைந்தும்
ஓடி னொருபதினா லாகுமே– –ஓடாய் நீ
ஓரெழுத்தைக் கண்டுநங்கி என்னோடுறங்கி நெஞ்சே,
ஓரெழுத்திலே சென்றுரை.

உறைகலத்தி னாய்போலே எள்ளமல மெல்லாம்
அறுத்தடைந்து ஞ்சே அறுதி– –நிறைத்துப்
புளியம் பழத்தோடு போலிரும்ம வேண்டும்
களியழியும் காலத்துக் கே.

காலங்கழித்துக் கடைவாயில் பாலுறுமுன்
வேலங் கனைய விழிமடவார்– –ஏலக்
குழியில் வைத்து மாரடித்துக் கூப்பிடுமுன் மாய்கைக்
கழியெடுத்துப் போடுமுன்கண்ணால்.

கண்ணாலே ஞானம் கருதாமல் நெஞ்சே! நீ
எண்ணாத மாய்கையெல்லா மெண்ணுகிறாய் –நண்ணாய்கேள்
பார்க்கவேண்டுந்தனையும் பத்தரைமாற்றுத்தங்கம்
ஆக்கப்போ காதோ உன்னால்?

உன்னாலே நெஞ்சமே! ஊழ்வினை வந்தாலும்
எந்நாளும் பாம்பின்வாய்த் தேரைபோல– –முன்னால்
அம்பிட்டுப் போகாதே ஆனந்த மெய்விளக்கு
நம்பி துணைக்குமுற்றும் நம்பு.

நம்பினான் றன்னை நடுவணையிலேயிருந்து
குப்பிடா தார்க்குங் குறையுண்டோ?--நம்பிப்
பளிங்கொளிப் போல் நெஞ்சே! பரந்திடலா மெங்கும்
விளங்கனலோ டேசேருமே.

ஏமன்வரு முன்நெஞ்சே எவ்வினை யுமேவென்று
சாம் நடுவதனில் சார்ந்ததிலே--சேமமுடன்
காலனையும் வென்றுசில காமனையும் வென்றுபின்பு
பாலிம்ம லாமதுநாம் பார்.

பாரயனும் மாலும் பரவவரு ருத்திரனும்
காரனைய வாரணத்தைக் கான்கண்டு--சீராய
நக்கத் திடை நடுவே நற்ககனப் பொற்பதியில்
சொற்கனகத் தற்பதியில் தோன்று.

தோன்றுமே யெல்லாச் சுகமுற் றதில்மனமே!
தோன்றுமே ஆனந்தச் சுந்தரர்பின்--தோன்றும்
அட்சரச்சு ருக்கினொடு மக்கரப் பெருக்கமுடன்
உச்சரித்து ரைக்கிறவுண் மை.

உண்மையிது காண்: ஒளியிருந்த வீடதுகாண்:
உண்மை சிவனிருக்கும் ஊருகாண்:--உண்மை
கருமை ஒளியேழ் கதியுள் பதங்கள்
மருவுதங்கி நீ வருந்துமாறு.

வருந்தும் பொழுது காண் மாயையாய் நெஞ்சே!
வருந்தும் குணமாக வந்து--வருந்தும்
இருவினைத் தொடக்கறும் ஏழ்வகைப்பிறப்பாம்
கருமலத்தி ருக்கறுங் காண்.

காண்மனமே! சக்தி சிவம் ஒன்றான காரணத்தை
காண் மனமே! மாலயனுங் காணரிதை--காண் மனமே!
செம்பொன்னினம்பலத்துள் சேருஞ்செஞ் சொல்லென்றும்
அம்பலத்தில் ஆடு நடனம்.

நடனமதுபார் மனமே! நயனத்திடையே
நடனமது நாலாம் பதங்காண்--நடனம்
பதிமதிவித் தாய் மனமே! பலக திவித் தாயெனவே
அதிவிதசித் தாந்தமாடும்.

ஆடும் பதிமனமே! அம்பலத்தைச் சுட்டுநடம்
ஆடும்பரமகுரு ஆனந்தம்--ஆடுகின்ற
கூத்தனைக் கூற்றிற்ற கூத்தபிரானையசுத்தம்
நீத்தவனைச் சித்தம வைத்து நில்.

நில்லு நிலவறமாய் நேசமுட னேபதியில்
நில்லு பிறவியற நீ நெஞ்சே:--நில்லு
கனல்மதியும் கார்மிடறும் கதிரும் மதியும்
புனலொடுசெஞ் சடையும் போற்றி.

போற்றித் தினமனமே! பொல்லாக் குலங்கள் விட்டுக்
காற்றுங் கனலுங் கருத்தொன்றாய்ப் –பார்த்தறிவால்
சுத்தமலப் பித்தையற்றுச் சுற்ற ஒழி சுற்றி லுற்றுச்
சத்தமறித் துற்றதிலே தங்கு.

தங்கு நீ சென்று சதாசிவத்தி லேமனமே!
மங்குங் கருக்குழிக்குள் வாராமல்– –தங்கும்
கருவும் புனலும் கதியும் கெதியும்
விதியும் திருத்தான வெளி.

வெளியில் வெளியாகி விண்ணவன் றானாய்
வெளிலொளியாயிருக்க– –வெளியிற்
கரியுரித்துப் போர்த்தவனைக் கார்மதிசென் றானைக்
கருவறுத்துப் பார்த்தலே காண்.

காணு மனமே! கரிகா லனைவதைத்துக்
காணு முலகமெல்லாம் காணுருவாய்த் தானு
மனவிரக மானபுலி மன்றுள நடனப்
பணவரவின் உற்றபா தம்.

பாதத்தான் அஞ்செழுத் தானபர மன்சிங்க
நாதத்தா னென்று நெஞ்சே! நன்றாகப்– –போதத்தான்
ஆரணத்தினோட்டைங் தண்டமெல்லாம் சுட்டதிரு
நீறணிந்து கொண்டிரு நித் தம்.

நித்தனாய் நிர்மலனாய் மூன்றுலகம் மூன்றுக்கும்
கர்த்தனாய் அஞ்செழுத்தின் காரணமாய்ப்– –பெற்ற
குருவினிற் பாதங்குளிர நினை நீ
தருமது பற்றாமனமே தான்.

தானவனா காவிட்டால் சண்டாள னிற்றடிவான்
தானவனு மங்கே தரிக்கொட்டான்– –மானார்
கலங்கும் கலவிக் கருத்திற்றால் தான்கொடுப்பான்
இலங்கும் அடிதேர் நெஞ்சே!

நெஞ்சே! உனக்கு நிலவறமாய்ச் சொன்ன வெலாம்
எஞ்சாவென் சொல்லேன் றிகழாதே:–நெஞ்சே!
கருத்திச்சை தள்ளிக் கருதென்று செப்பின்
கருத்திச்சை தள்ளுகருத் துள்.

உள்ளிருந்து நெஞ்சே! உலவுஞ் சிவகுருவை
வெள்ளெருக்கின் பூச்சூடும் வேணியனை–உள்ளே
மனமுருகப் பார்த்தால் மலைசிலையாகச் சென்றால்
உனதறிவால் பார்த்துநீ ஓது.

ஓதி நீ நெஞ்சே! கேள்: ஓரெழுத்து மந்திரத்தால்
ஆதியாய் எங்கும் அமர்ந்தானை–ஓதில்
கடிய மிடியும் கடிய பிணியும்
கடியவனு காமல்காக் கும்.

காக்குந்தினமே கடிய பிறப்பறுத்துக்
காக்கும் பலபிணிநோய்காட்டாமல் –நோக்குமந்தி
வந்து பகல்வெளியில் வாராத மன்மதனை
உந்து மதையுணர்ந்தில் வாழ்:

வாழுநீ நெஞ்சே! மயங்கித் திரியாதே
ஏழெழுத்துக் கப்பா லிருப்பானை –ஏழை
வருத்தந்தீர்த் தன்பன் மன்மதனில் தங்கு
பருத்தரத்தி னத்தைப் பணி.

பணிந்து துதிமனமே! பல்லுயிர்கட் கெல்லாம்
அணுவிலணு வாங்கியிருந் தானைத் –துணிவாய்ப்
பிறவா திருக்கவும் பேரின்ப வாழ்வைத்
திறமாக நம்பிச் செலுத்து.

****** முற்றும் ******

---

முதற்பக்கம் Front Page     பொருளடக்கம் Contents Page

---